**<u>மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்</u>**

C.O.S. No. 1 of 2023

பெயர் : சுப்ரமணியம்

<u>16.12.2024</u>

**<u>வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் பிரதிவாதி எனக்கு பாக்கி தொகை கொடுக்க வேண்டும் என்று சொல்லிதான் இந்த வழக்கை போட்டுள்ளேன். நான் இவ் வழக்கில் ஒப்பந்த தேதி முதல் பிரதிவாதியிடம் இருந்து வட்டி கேட்டுள்ளேனா என்று கேட்டால், ஒப்பந்த தேதி முதல் வட்டி கேட்கவில்லை. ஒப்பந்த தேதி முதல் நான் வட்டி கேட்காததற்கு தனிப்பட்ட காரணம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டால், பிரதிவாதி ஒப்பந்தப்படி 45 நாட்களுக்குள் ரூபாய் 58 லட்சத்தை தருவதாக ஒப்புக்கொண்டார், ஆனால் ஒப்புக்கொண்டபடி அவர் தரவில்லை என்பதால் நான் ஒப்பந்த தேதி முதல் வட்டி கேட்டுள்ளேன், முன்பு தவறுதலாக ஒப்பந்த தேதி முதல் வட்டி கேட்கவில்லை என்று சொல்லிவிட்டேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் பிரதிவாதிக்கு Exhibit A1 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். Exhibit A1 அறிவிப்பில் யாரிடம் பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியுள்ளேனா என்று கேட்டால், என்னிடம்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லியுள்ளேன். Exhibit A1 அறிவிப்பில் நான் வட்டி முதற்கண்டு என்று கேட்டுள்ளேன். Exhibit A1ல் உள்ள சங்கதிகள் படிதான் நான் இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், ஆமாம். நான் Exhibit A1அறிவிப்பில் 2வது பக்கத்தில் 2வது பத்தியில், நான் "R.G. & Co," என்ற Firm ஐ மேட்டுபாளையத்தில் நடத்தி வருவதாகவும், நான் பொருட்களை பிரதிவாதிக்கு சப்ளை செய்ததற்கு ரூபாய் 31,97,801/– G.S.T. வருகிறது என்றும், எனவே மொத்தம் ரூபாய் 89,97,801/– பிரதிவாதியிடம் இருந்து வரவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால், "R.G. & Co," Firmஐ நான் நடத்தவில்லை, "R.G. & Co," Firmக்கும், என்னுடைய கம்பெனியான சத்குரு பாபாஜி டிரேடர்ஸ்கும் மற்றும் சத்குரு பாபாஜி எர்த்மூவர்ஸ் ஆகிய 3 நிறுவனங்களுக்கும் சேர்த்து G.S.T. தொகை ரூபாய் 31,97,801/– மற்றும் நிலுவை தொகையான ரூபாய் 58,00,000/– மொத்தம் சேர்த்து ரூபாய் 89,97,801/– பிரதிவாதி கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதி எனக்கு எந்த நிலுவை தொகையும் கொடுக்க வேண்டியதில்லை என்றும், அதனால்தான் என் வழக்கறிஞர் அறிவிப்பிலும், பிராதிலும் முன்னுக்கு பின் முரணாக கூறியுள்ளேன் என்று சொல்வது தவறாகும். என் Exhibit A1 அறிவிப்பு படியும், வழக்குரையின் படியும் G.S.T. தொகை ரூபாய் 31,97,801/– "R.G. & Co," என்ற Firm க்குதான் பிரதிவாதி தரவேண்டும் என்று கண்டுள்ளது என்று சொன்னால், டைப் தவறு காரணமாக அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. Exhibit A1அறிவிப்பில்

மேற்கூறியவாறு டைப் தவறு உள்ளது என்று நான் மறுபடியும் பிரதிவாதிக்கு அதை திருத்தி அறிவிப்பு அனுப்பினேனா என்று கேட்டால், அனுப்பவில்லை. நான் கூறும் டைப் தவறு உண்மை என்றால் அதை பற்றி வழக்குரையிலும், என் முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்திலும் சொல்லியிருப்பேன் என்று சொன்னால், அவற்றில் சொல்லவில்லை. Exhibit A1 வழக்கறிஞர் அறிவிப்பிற்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால், சம்பந்தம் இருக்கிறது.

நான் தாக்கல் செய்துள்ள Exhibit A4 ஒப்பந்தத்தில் பக்கம் 2, பத்தி 2ல், G.S.T. தொகை சம்பந்தமாக இரு தரப்பு ஆடிட்டர்களை வைத்து தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது என்று சொன்னால், ஆமாம். அந்த G.S.T தொகை எப்பொழுது தீர்மானிக்கப்பட்டது, யாரால் தீர்மானிக்கப்பட்டது, அது பிரதிவாதியை அழைத்து அவருடைய ஆடிட்டரை வைத்து தீர்மானிக்கப்பட்டதா என்று கேட்டால், என்னுடைய கம்பெனியின் ஆடிட்டர் பிரதிவாதி எனக்கு இவ்வளவு G.S.T. தொகை கொடுக்க வேண்டும் என்று சான்று வழங்கிவிட்டார், அதை நான் பிரதிவாதியிடம் கொடுத்து அவருடைய ஆடிட்டர் மூலம் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்று நான் பலமுறை அழைத்தும், பிரதிவாதி வரவில்லை, பிரதிவாதியின் ஆடிட்டரோடு பேசுவதற்கான வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. பிரதிவாதி G.S.T. தொகையை தீர்மானிப்பதற்கு அவருடைய ஆடிட்டரோடு வரவில்லை என்ற

சங்கதியை நான் Exhibit A1 வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேனா என்று கேட்டால், நான் அதை Exhibit A1ல் சொல்லவில்லை. நான் சொல்வது உண்மையாக இருந்தால், முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்க மாட்டேன் என்றும், எனவே இதுவே பிரதிவாதி எனக்கு எந்த தொகையும் கொடுக்க வேண்டாம் என்பதை காண்பிக்கிறது என்று சொன்னால், எனக்கு பிரதிவாதி பணம் கொடுக்க வேண்டும் என்பதுதான் உண்மை. நான் தற்பொழுது வழக்கிற்காக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், உண்மையாக இருந்தால் Exhibit A1லேயே சொல்லியிருப்பேன் என்று சொன்னால், சரியில்லை. எந்தெந்த பொருளுக்கு பிரதிவாதி எவ்வளவு G.S.T. தொகை செலுத்த வேண்டும் என்று கேட்டால், எல்லாவற்றையும் குறிப்பிட்டுதான் ஆடிட்டர் எனக்கு சான்று வழங்கியுள்ளார். Exhibit A3 ஆடிட்டர் சான்றுபடி பிரதிவாதி சத்குரு பாபாஜி எர்த் மூவர்ஸ் மற்றும் சத்குரு பாபாஜி டிரேடர்ஸ்க்கு 2018-2019, 2019-2020, 2020-2021 வருடங்களுக்கு செலுத்த வேண்டிய G.S.T தொகையை, சப்ளை செய்யப்பட்ட பொருட்களின் இன்வாய்ஸ் மற்றும் வரிவிதிப்பு மதிப்பு அடிப்படையில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால், உண்மைதான். Exhibit A4 ஒப்பந்தத்தில் உள்ளபடி பிரதிவாதியையும் அவருடைய ஆடிட்டரையும் அழைத்து

ஆலோசிக்காமல்தான் Exhibit A3 ஆடிட்டர் சான்று பிரதிவாதி கொடுக்கவேண்டிய G.S.T. தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால், நான் சொன்னதுபோல் அதை தீர்மானிப்பதற்கு பிரதிவாதியும், அவருடைய ஆடிட்டரும் வரவில்லை. Exhibit A3 ஆடிட்டர் சான்று உண்மையாக இருந்தால், G.S.T. தொகையை தீர்மானிப்பதற்கு பிரதிவாதிக்கு நான் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்று சொன்னால், Exhibit A3 உண்மைதான், நான் பலமுறை அழைத்தும் பிரதிவாதி வரவில்லை. நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றும், நான் எந்த காலத்திலும் பிரதிவாதியை அழைக்கவில்லை என்றும், அழைத்திருந்தால் அதற்கான சாட்சியத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும். Exhibit A3 சான்றை என் ஆடிட்டர் எப்பொழுது தீர்மானித்தார் என்று கேட்டால், அதில் தேதி போட்டுள்ளது, தற்பொழுது அந்த தேதி ஞாபகம் இல்லை. சாட்சியிடம் Exhibit A3ஆடிட்டர் சான்றை கொடுத்து அதில் எந்த தேதி போடப்பட்டுள்ளது என்று கேட்டபோது, சாட்சி அதை படித்து பார்த்துவிட்டு அதில் தேதி குறிப்பிடவில்லை என்று கூறுகிறார். நான் பிரதிவாதிக்கு ரூபாய் 58,00,000/- பெருமானமுள்ள பொருட்களை சப்ளை செய்ததற்கு எவ்வளவு G.S.T. வரும் என்று கேட்டால், ரூபாய் 58,00,000/- பெருமானமுள்ள பொருட்களுக்கு, ஒவ்வொரு பொருளுக்கும்

G.S.T. தொகை மாறுபடும், 5%, 18% மற்றும் 28% என ஒவ்வொரு பொருளுக்கும் G.S.T. தொகை மாறுபடும்.

நான் எந்த வருடத்தில் இருந்து பிரதிவாதிக்கு சத்குரு பாபாஜி எர்த் மூவர்ஸ் மற்றும் சத்குரு பாபாஜி டிரேடர்ஸ் ஆகியவற்றின் உரிமையாளர் என்ற கோதாவில் கட்டுமானப் பொருட்களை சப்ளை செய்தேன் என்று கேட்டால், நான் அவருக்கு 2018 முதல் 2020 வரை சப்ளை செய்து வந்தேன். நான் வழக்குரையின் பத்தி 11ல் 2019 ஆம் ஆண்டு முதல்தான் பிரதிவாதிக்கு பொருட்களை சப்ளை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால், அது டைப் தவறாகும். நான் தவறான ஆதாயம் பெற வேண்டும் என்பதற்குதான் தவறான வழக்கை தாக்கல் செய்து தவறாக சாட்சியமும் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. நான் சொல்வதுபோல் இது டைப் தவறாக இருந்தால் என்னுடைய முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தில் சொல்லியிருப்பேன் என்று சொன்னால், சரியாக கவனிக்கவில்லை. Exhibit A3ஆடிட்டர் சான்றில் 2019-2020 வருடத்தில் இன்வாய்ஸ் மதிப்பை தவறாக மிகைப்படுத்தி காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியில்லை. Exhibit A3 ஆடிட்டர் சான்றில் சத்குரு பாபாஜி டிரேடர்ஸ் சம்பந்தப்பட்ட கணக்கில் 2019-2020 வருட Taxable value, C.G.S.T. மற்றும் S.G.S.T.ஐ கூட்டினால், அதில் குறிப்பிட்டுள்ள இன்வாய்ஸ்

தொகை வராது என்று சொன்னால், என்னுடைய ஆடிட்டரை அனுகி அவர் மூலமாக விளக்கம் அளிப்பேன். தவறான ஆதாயம் பெறுவதற்காக, தவறான Exhibit A3ஆடிட்டர் சான்று பெற்று, தவறாக வழக்கை போட்டுள்ளேன் என்று சொன்னால், சரியில்லை.

N.
MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2024.12.16 16:06:19 +0530